**S.C.No.58/2014**

**நாள். 13.12.2021**

**அ.சா.2 திருமதி வள்ளியம்மாள் க/பெ.சரவணன்**

**மனுவின் முன்னிலைக்கு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**என் கணவர் புகாரில் என்ன சங்கதிகள் கொடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. புகார் கொடுக்கும்போது நான் காவல்நிலையம் சென்றிருந்தேன். புகாரை யார் எழுதினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் தெரியும். புகாரில் என் கணவருக்கு நடேசன், லோகநாதன் சொல்லி தான் தெரியும் என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி தான். புகாரில் நடேசன் புறடையார் கோவில் பின்பக்கமாக எதிரி குழந்தையை அழைத்துச் சென்றதை சொல்லி தான் என் கணவர் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரி தான். சாட்சி முருகன் புறடையார் கோவில் ஆற்றுப்பக்கம் சென்றதாக சொல்லி தான் என் கணவருக்கு தெரியும் என்று புகாரில் சொல்லியுள்ளார் என்றால் சரி தான். மேற்படி இருவரும் சொல்லி தான் என் கணவருக்கு தெரியும் என்றால் சரி தான். மேற்படி மூவர் சொன்னதின் யூகத்தின் அடிப்படையில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் ஊரே சொல்லியது. அரைநாண்கயிறை அறுவடை செய்யப்பட்ட சேட்டு நிலத்தில் இருந்து மேலாக இருந்ததை எடுக்கப்பட்டது என்றால் சரி தான். நகையை ஊராரும், போலிசாரும் சேட்டு நிலத்தில் தேடினார்கள் என்றால் சரி தான். நகையை திருடவேண்டிய அவசியம் எதிரிக்கு இல்லை என்றாலும், யூகத்தின் அடிப்படையில் என் கணவர் கொடுத்த புகாருக்கு நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம்**

**இல்லை என்றாலும், சந்தேகத்தின் பேரில் கொடுக்கப்பட்ட புகாருக்கு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-.K.Vijaya.
Additional Sessions Judge,
Arani.